[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு ஒன்றியங்கள் எடுக்கப் பெற்றிருக்கின்றன. மேற்புறம், தக்கலை, திருவட்டாறு, தோவாளை ஆகியவையாகும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த தன்னிறைவுத் திட்டத் தின்கீழ் எத்தனை இடங்கள் எடுக்கப்பெற்றிருக்கின்றன? எவையெவை? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எல்லா மாவட்டங் களிலிருந்தும் ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தால் அதற்கே $\frac{1}{2}$ மணி நேரம் போய்விடும். ஆகவே அவற்றிற்கான குறிப்புகளை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு உறுப்பின ருக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் அதிக மாகும். ஆகையினால் அமைச்சர் அவைகளை அச்சடித்து அனுப்பிவிடுவார்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மதுரை மாவட் டத்திலே திருமங்கலம் வட்டம், உசிலம்பட்டி வட்டம் ஆகிய இடங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் கடும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை பொய்த்ததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையினால் அதை வறட்சிப் பிரதேசமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை மேற் கொள்வதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத் திருந்தேன்....(மணியடிக்கப் பெற்றது).

[1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வறட்சியைப் பற்றி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அவைக்குத் தர இருக்கிறார்கள். அப்போது பேசிக் கொள்ளலாம். அது வரையில் பொறுமையாக இருங்கள். அதற்குள் மழை வந்து விட்டால் நல்லது.

[முற்பகல் 10–10]

திரு. வெ. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்னை என்னவென்று பார்த்தபிறகுதான் அனுமதிக்க முடியும். இவை எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் எழுப்பக்கூடிய பிரச்னை முக்கியமான பிரச்னையாகும். அது, அவர் சம்பந்தப் பட்ட பிரச்னையாகும். ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டது சம்பந்தமாக இந்த அவைக்கு தவறான தகவல் கொடுக்கப் பட்டிருப்பதாக அவர் கருதுகிறார். அதை விசாரணை செய்வது உங்கள் பொறுப்பு. நீங்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டியவர்கள். நீங்களே இது சம்பந்தமாக விவாதம் நடத்தத் தயாராயில்லை என்றால் நாங்கள் எங்கே போவது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தயாராயிருக்கிறேனா இல்லையா என்று நீங்களே தீர்ப்புக் கொடுத்தால் என்ன செய்வது ? அதைப் பற்றி முடிவு எடுக்க எனக்கு நேரம் கொடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சட்ட சபை விதிகளுக்கு உட்பட்டு ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப விரும்புகிறேன். சென்னை மாம்பலம் காவல் நிலையத்தில், போலீஸ் லாக்கப்பில் ஒருவர் இறந்து இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அது குறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறபோது—இந்த அவையின் மரபு போலீஸ் லாக்கப்பில் யாராவது இறந்துவிடுகிற சூழ்நிலை வருகிறபோது அது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு உறுப்பினர்கள் பேசுவதற்கு வசதிவாய்ப்பு தரப்பட்டு அரசாங்கத் தரப்பில் இருந்து அதற்கு விளக்கம் கொடுக்கிற முறைதான் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் அது கவன ஈர்ப்பாக மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி கவன ஈர்ப்பாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாற்றப்பட்டிருப்பதின் காரணமாக உறுப்பினர்கள் ஒன்றிரண்டு கேள்விகள்தான் கேட்க முடியும். ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானமாக அனுமதிக்கப்பட்டால்தான் அப்பிரச்னைபற்றி விவாதிக்கமுடியும், இல்லையென்றால் அவைபற்றி சபைக்குத் தெரியாமல் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுத்திருக்கிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி: திரு. ரகுமான்கான் எழுப்பியுள்ள பிரச்னை ஒத்திவைப்புத் தீர்மானத்தை கவன ஈர்ப்பாக மாற்றியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அலுவலகக் குறிப்பைப் பார்த்துத்தான் மாற்றியிருப்பேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, 'இந்து' பத்திரிகை மீது போன தடவை பிரிவிலேஜ் மோஷன் மீது, அவை முன்னவர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார்கள். அதிலே இரண்டு முக்கியமான தவறுகள் இருந்து, சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டன. அப்போது நான் ஒரு அறிக்கையைக் கொடுப்பதற்கு தங்கள் அனுமதியைக் கேட்டிருக்கிறேன். அது எப்போது அஜெண்டாவில் எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெரிய வேண்டும். இது நெம்பர் 1. நெம்பர் 2, திருச்சி சென்ட்ரல் ஜெயிலர் சம்பந்தமாக பிரிவிலேஜ் மோஷன் பற்றி ஏற்கனவே பேசியாகிவிட்டது. தாங்கள் தீர்ப்பு கொடுக்கவில்லை. இது சம்பந்தமாக ஜெயிலர் மீது பிரிவிலேஜ் மோஷன் சப்ஜக்டிலே அமைச்சர் அவர்களும், பல எம்.எல்.ஏக்களும் சிறைக்குச் சென்று குறிப்பிட்ட பிரச்னைபற்றி கைதிகளிடம் ஸ்டேட்மென்ட் எடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை வரவழைத்து, தாங்கள் தீர்ப்பு தரவேண்டும். இன்னும் மூன்று, நான்கு நாட்களுக்குத்தான் சட்டமன்றக் கூட்டம் உடனடியாக, அஜண்டாவில் அவைகளைச் சேர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலனை செய்து, எடுத்துக் கொள்ளப்படும்.